Date : 09.06.2025

SC.No. : 192/2024

PW : 2

Name : **இந்துமதி க.பெ.துரைப்பாண்டி**

சாட்சி மீண்டும் மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

அ.சா.1 எனது கணவர். அவர் மர வியாபாரம் தொழில் செய்து வருகிறார். அவர் மீது அரசுக்கு சொந்தமான மஞ்சனத்தி மரங்களை வெட்டியது சம்மந்தமாக வட்டாச்சியர், வருவாய் அலுவலர் ஆகியோர்கள் என் கணவரை விசாரித்துகொண்டிருந்தார்கள். 1ம் எதிரி அர்ச்சுணன் தலையாரி வேலை பார்க்கிறார். நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தலையாரிக்கு மேல் அதிகாரி தாசில்தார், கிராம நிர்வாக அலுவலர், வருவாய் அலுவலர் என்றால் சரிதான். சம்பவத்தன்று எதிரியின் வீட்டிற்கு அருகில் ஜீப்பை நிறுத்தி விசாரித்தார்கள். அப்போது 1ம் எதிரி அங்கு வந்தார். அப்போது 1ம் எதிரியை இங்கு வரக்கூடாது என்று சொல்லி என் கணவர் விரட்டிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள கருவை மரங்களை வெட்டுவது சம்மந்தமாக 1ம் எதிரி மேலதிகாரிகளிடம் சொல்லி பிரச்சினை செய்வார் என்றால் சரிதான். இந்த விபரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் தற்போது அதுவும் ஞாபகமில்லை. என்னிடம் போலிசார் விசாரித்து கையொப்பம் வாங்கவில்லை. என் கையில் ரத்தம் வடிந்துகொண்டிருந்த போது என் வீட்டிற்கு காவல் ஆய்வாளர் வந்து பார்த்தார். அதன்பின்பு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். யார் சொன்ன தகவலின்பேரில் ஆய்வாளர் என் வீட்டிற்கு வந்தார் என்று விபரம் எனக்கு தெரியாது. என் வீட்டில் ரத்தம் வடிந்துகிடந்ததை ஆய்வாளர் பார்த்தார். நான் அணிந்திருந்த நைட்டி முழுவதும் ரத்தமாக இருந்தது. காவல்துறையினர் என் நைட்டியை வாங்கிக்கொள்ளவில்லை. என் வீட்டில் பையனும், பொண்ணும்

இருந்தார்கள். என் பையனுக்கு 6 வயது இருக்கும். அந்த பையனுக்கு சம்பவம் நடந்தது தெரியும் ஆனால் போலிசார் அவனை விசாரிக்கவில்லை. அ.சா.பொ. 1அருவாள் 1ம் எதிரியின் அருவாள் இல்லை என்றும் அது என் வீட்டில் இருந்த எங்களுக்கு சொந்தமான அருவாள் என்றால் சரியல்ல. என் கணவருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு ஆனால் அன்றைய தினம் மது அருந்தவில்லை. சம்பவத்தன்று மாலை என் கணவர் மது அருந்திவிட்டு 1ம் எதிரியிடம் உன் அதிகாரிகளிடம் சொல்லி நீதான் என் தொழிலை கெடுக்கிறாய் என்று 1ம் எதிரியுடன் சண்டையிட்டார் என்றால் சரியல்ல பின்பு அதை விலக்கிவிட்டார்கள். பின்னிடு என் கணவர் தான் என் வீட்டிலிருந்த அருவாளை எடுத்துக்கொண்டு எதிரியை வெட்டனும் என்று சொல்லி போகும்போது நான் அருவாளை தடுத்தபோது எனக்கு காயம் ஏற்பட்டது என்றும் அப்படி ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரியின் குடும்பத்தை பழி வாங்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு உண்மைகளை மறைத்து பொய்யான புகாரை கொடுத்து என் கணவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் என் கணவருக்கும் எதிரிகளால் காயம் ஏற்படவில்லை என்றும் எதிரிகள் யாரும் எங்களை அசிங்கமாக பேசவும், மிரட்டவும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.06.09 15:34:29 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.